ஆனால், அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு பகுதிகள் எல்லாம் பேரூராட்சிப் பகுதிகளாக இருக்கிற காரணத்தினால், இடம் தேர்வு செய்வதில் கொஞ்சம் சிரமம் ஏற்படுகிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற வாடிப்பட்டி பகுதியிலும் இடம் தேர்வு செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், இடம் தேர்வு செய்வதில் அரசுக்கு ஒத்துழைப்பாரேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற பகுதிகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

200—

தானிய சேமிப்புக் கிடங்கு

***53375 திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, மேல்வளையமாதேவி ஊராட்சியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, மேல்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள வளையமாதேவி மேல்பாதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 1976 ஆம் ஆண்டு 1,181 சதுர அடியில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்பட்டு, தற்போது உரக் கிடங்காகச் செயல்பட்டு வருகின்றது. மேலும், 1990 ஆம் ஆண்டு, 1,355 சதுர அடியில்

2015 செப்டம்பர் 2]

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கிடங்கும் தற்போது இச்சங்கத்தின் அலுவலகமாகச் செயல்படுகின்றது. இந்நிலையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் விரிவாக்கப் பணிகளுக்காக இச்சங்கத்திற்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்த அறிவிப்புகள் வெளியிட்டுள்ளன. வளையமாதேவி மேல்பாதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையில், இச்சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை வேறு எதுவுமில்லை என்பதால், புதிதாக தானிய சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத்தின் திருவிளக்கே! ஏழைகளின் குல விளக்கே! எங்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் எங்கள் குல தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேயத்தின் மறு உருவமாய், கருணை மழை பொழியும் எங்களின் பாசத் தாயே! மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

கேட்காமலேயே அள்ளித் தருகின்ற வாழும் வள்ளல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சியில், எனது தொகுதியில் மட்டும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு 17 தானிய சேமிப்புக் கிடங்குகளை வாரி வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

N.L.C. நில எடுப்பு விவகாரத்தில் அந்த இடத்திற்கு Notice வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ள காரணத்தினால், என்னுடைய புவனகிரி தொகுதியில் உள்ள கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கே. ஆடூர், விளாகம், பண்ணப்பட்டு, டி.நெடுஞ்சேரி, கூளாப்பாடி ஆகிய ஊராட்சி

ஒன்றியங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தானிய சேமிப்புக் கிடங்கு இல்லாமல் உள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்கு கட்டுவதற்குப் போதிய இட வசதி உள்ளது. எனவே, இப்பகுதி விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் இந்த 5 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தானிய சேமிப்புக் கிடங்குகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற அளவுக்கு இதுவரை எந்த ஆட்சியிலும் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 3,879 கிடங்குகளை 489.62 கோடி ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியிலே மேலும், 5 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு தானிய சேமிப்புக் கிடங்குகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்க நிருவாகிகள் தீர்மானம் போட்டு கொடுக்கும்பட்சத்தில், கூட்டுறவுத் துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்து, இங்கே அனுப்பும்பட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதி பெற்று கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

2015 செப்டம்பர் 2]

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அனுமதி பெற்று, நான் கேட்டுக் கொண்ட 5 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தானிய சேமிப்புக் கிடங்குகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

அன்னதானத் திட்டம்

*20663 **திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியிலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாதப் பெருமாள் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாததால், தற்பொழுது அன்னதானத் திட்டம் செயல்படுத்தும் அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.